கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2002- 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 17.06.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (53)

53. இறுதியாக இராணுவ முகாமும் மூடப்பட்டது!


Rohana wijeweera

பயிற்சி முகாம் என்றதும் இன்றைய தலைமுறையினர் உடனடியாக ஆயுதப்பயிற்சி முகாம் பற்றியே எண்ணுவர். அதற்குக் காரணம் கடந்த 30 வருடங்களாக அவர்கள் அனுபவித்து வந்த யுத்தச் சூழல். 1960களின் நடுக்கூறிலிருந்தே இலங்கையில் உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியொன்று அமைய வேண்டுமானால், அது ஆயுதம் தாங்கிய புரட்சி ஒன்றின் மூலமே சாத்தியப்படும் என, எமது புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே பிரச்சாரம் செய்துவந்த போதிலும், அதற்கான ஒரு சிறு தயாரிப்பிலும்கூட அது ஈடுபட்டிருக்கவில்லை. (அதையும் ஒரு பிரதான காரணமாகச் சொல்லியே எமது கட்சியிலிருந்து சென்ற ரோகண விஜேவீர தமது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இயக்கத்தை உருவாக்கி இருந்தார்.)

இங்கு நான் குறிப்பிடும் பயிற்சி முகாமும் வெறுமனே ஓர் அரசியல் பயிற்சி முகாம் மட்டுமே. இது அக்கராயன் பகுதியிலுள்ள கோணாவில் மத்தியதர வகுப்புக் குடியேற்றத் திட்டத்தில் 70ஆம் இலக்க வயல் காணியில் அமைந்திருந்தது. இந்த வயல் காணி 10 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்டது. அக்கராயன் குளத்திலிருந்து நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இதுதவிர, இதனுடன் சேர்த்து 5 ஏக்கர் விஸதீரணம் கொண்ட மேட்டுக்காணியும் வேறு ஒரு இடத்தில் வழங்கப்பட்டிருந்தது. அது நாம் அங்கு பயிற்சி முகாம் அமைத்தபோது துப்பரவு செய்யப்படாமல் காட்டுக்காணியாக இருந்தது.

இந்தப்பகுதியிலுள்ள காணிகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதி படைத்த உயர் அரசாங்க அதிகாரிகளுக்குச் சொந்தமானவையாக இருந்தன. காணிச்சொந்தக்காரர்களில் சிலர் மட்டுமே ஆட்களை வைத்து அதில் விவசாயம் செய்தனர். பெரும்பாலோர் அவற்றைக் குத்தகைக்குக் கொடுத்திருந்தனர். அவற்றில் வடபகுதியைச் சேர்ந்த ஏழை மக்களும், மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவழி உழைப்பாளி மக்களும் கூலிகளாக வேலை செய்தனர்.

எமது 70ஆம் இலக்கக் காணி டாக்டர் குரோசற் தம்பையா அவர்களுக்குச் சொந்தமானது. யாழ்ப்பாணத்திலுள்ள செல்வாக்குப் பெற்ற தம்பையா குடும்பத்தைச் சேர்ந்த அவர் கம்பஹாவில் வைத்தியசாலை ஒன்றை நடாத்தி வந்தார். அவர் அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான தோழர் எஸ்.டி.பண்டாநாயக்கவுடன் நெருங்கிய நட்புணர்வைக் கொண்டிருந்ததுடன், எமது கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபியாகவும் இருந்தார். எனவே எமது பயிற்சி முகாம் திட்டத்தைச் சொன்னவுடனும், எவ்வித குத்தகைப் பணமும் வாங்காமல் தமது 15 ஏக்கர்கள் காணியையும் எம்மிடம் மனமுவந்து ஒப்படைத்தார். உண்மையில் அந்தக் காணியைப் பெறுவதிலும், அந்த முகாமை நிறுவதிலும் எமது கட்சியின் அப்போதைய வட பிரதேசச் செயலாளா தோழர் வீ.ஏ.கந்தசாமி முக்கிய பங்கு வகித்தார். (இந்த முகாம் அமைத்ததை விரும்பாத கட்சியின் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசன், 1972இல் கட்சி பிளவுபட்டு நாமும் அவரும் வேறு அணிகளான போது, எமக்கு எதிராக அவர் வெளியிட்ட 18 பக்க அறிக்கையில் தோழர் வீ.ஏ.கந்தசாமியும் நாமும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் 'நக்சல்பாரி' வேலைமுறையை உருவாக்க முனைந்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார்)

இந்தக் காணியில் நாம் பயிற்சி முகாமை அமைத்ததின் நோக்கம், புதிதாக எம்முடன் இணையும் இளைஞர்களுக்கு அரசியல் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவதே. அரசியல் வகுப்புகளை தோழர் வீ.ஏ.கந்தசாமியும், எம்மில் சிலரும் எடுத்தோம். பகலில் எமது வயலிலும், மேட்டுக்காணியிலும் வேலைகளில் ஈடுபடுவதுடன், மற்றைய நேரங்களில் அங்குள்ள ஏனையோரின் வயல்களிலும் எமது தோழாகள் உழைப்பில் ஈடுபடுவர். இரவில் சுமார் இரண்டு மணி நேரம் மார்க்சிய நூல்களைக் கற்பதிலும், அவற்றைப் பற்றிய கலந்துரையாடல்களிலும் ஈடுபடுவர். அதன் பின்னர் முறை வைத்து எம்மிடம் இருந்த சாதாரணதர துப்பாக்கிகளைக் (shot gun) கொண்டு வேட்டைக்குச் செல்வர்.

இந்த முகாமில் பெரும்பாலும் வெளியிடங்களைச் சேர்ந்த புதிய தோழர்களே வந்து தங்கியிருந்து அரசியல் பயிற்சி பெற்றனர். குறிப்பாக நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும், விவசாயப்படை கலைக்கப்பட்ட பின்னர் எம்முடன் இணைந்தவர்களும், கிளிநொச்சிப் பிரதேசத்தின் பரந்தன், உமையாள்புரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும் பயிற்சி பெற்றனர். இவர்களில் பலர் பின்னர் கிளிநொச்;சிப் பிரதேசத்தின் பெரும்பாலான கிராமங்களில் முழுநேர அரசியல் ஊழியர்களாகச் செயல்பட்டனர்.



நாம் இதை ஒரு சாதாரண அரசியல் முகாமாக நடாத்திய போதும், பொதுமக்கள் மத்தியில் அதுபற்றிப் பலவிதமான தப்பான அபிப்பிராயங்கள் நிலவி வந்தன. சிலர் அப்போததான் முளைவிட ஆரம்பித்திருந்த தமிழ் இளைஞர்களின் தீவிரவாத இயக்கங்களுடன் (தமிழ் மாணவர் பேரவை போன்றவை) எம்மை இணைத்துப் பார்த்தனர். வேறு சிலர் ஜே.வி.பி இயக்கத்துடன் இணைத்து நோக்கினர். அந்தப் பகுதி இளைஞர்களுடன் நாம் நெருங்கிய நட்புறவை வளர்த்துக் கொண்டிருந்த போதிலும், சாதாரண மக்கள் எம்மை ஒரு பயம் கலந்த மரியாதையுடனேயே நோக்கினர்.

அங்குள்ள வயல்களுக்கு எப்போதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்துகொண்டே இருந்தது. ஆதலால் தண்ணீர் பாய்ச்சுவதற்கான ஒரு முறை வகுக்கப்பட்டிருந்த போதும், ஒருவர் தண்ணீர் பாய்ச்சும் போது முறையில்லாத மற்றொருவர் அதில் களவாகத் தனது வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதும், தடைகள் ஏற்படுத்துவதும், வாய்க்கால்களை வெட்டி விடுவதும் எனப் பல தகராறுகளும், சில வேளைகளில் அடிதடிச் சண்டைகளும் நடப்பதுண்டு. ஆனால் எமது 70ஆம் இலக்க வயலுக்குத் தண்ணீர் பாய்கிறது என்றால், அன்றைய தினம் அங்குள்ள எல்லோருமே சுய கட்டுப்பாட்டுடன் எவ்வித இடையூறும் எமக்குச் செய்யாமல் பார்த்துக் கொள்வர்.

நாம் ஆயுதம் தாங்காத, ஆனால் கட்டுப்பாடான ஓர் அரசியல் அமைப்பாகச் செயற்பட்டதைக் கண்டே மக்கள் ஒருவித பயத்துடன் கூடிய மரியாதை செலுத்தினர் என்றால், ஆயிரக்கணக்கான போர் வீரர்களையும், அவர்களது உடம்பு முழுவதும் ஆயுதங்களாலும் அலங்கரித்திருந்த புலிகள் இயக்கத்தைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கியதில் வியப்பதற்கு எதுவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பொதுமக்கள் ஒருபக்கம் எம்மைப்பற்றி பலவிதமான ஊகங்களைக் கொண்டிருக்கையில், கிளிநொச்சிப் பொலிசாரும் எம்மைப்பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றோம். (1971 ஏப்ரலில் ஜே.வி.பியின் முதலாவது ஆயுதக்கிளர்ச்சி நடைபெற்ற நேரத்தில், அந்த முகாமில் எங்களில் பலர் தங்கியிருந்தோம். எங்களில் 42 பேரைக் கைதுசெய்வதற்கான பட்டியல் ஒன்றை வைத்திருந்த கிளிநொச்சிப் பொலிசார், தினசரி கோணாவில் சந்தி வரை வந்து பொதுமக்களிடம் எங்களைப் பற்றி விசாரித்துவிட்டுச் சென்றனரேயொழிய, முகாமருகே வரவில்லை. நாம் அங்கிருந்து வெளியேறிய பின்னரே அவர்கள் முகாம் இருந்த பகுதிக்குள் வந்து ஆராய்ந்துவிட்டுச் சென்றதாகப் பின்னர் பொதுமக்கள் தெரிவித்தனர். அவர்கள் பின்னர் முரசுமோட்டைப் பகுதியில் எமது தோழர்கள் பலரைக் கைதுசெய்ததுடன், அவர்களில் சிலரை ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவுடன் ஒன்றாகச் சிறை வைத்தனர்)

மறுபக்கத்தில் எம்மைப்பற்றிய செய்தியொன்றை கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனத்தின் மாலைத் தினசரியான 'மித்திரன்' வெளியிட்டு அரசின் கவனத்தையும் ஈர்க்க வைத்தது. அக்கராயனிலும் அதற்கு சற்றுத் தள்ளியிருந்த வன்னேரிக் குளத்திலும் சில தமிழ் தீவிரவாத இளைஞர்கள் முகாமிட்டிருப்பதாகவும், அவர்கள் பகல் நேரங்களில் விவசாயிகளோடு விவசாயிகளாக வேலை செய்வதாகவும், இரவு வேளைகளில் ஆயுதப்பயிற்சியில் ஈடுபடுவதாகவும் அச்செய்தி குறிப்பிட்டது. அந்தச் செய்தி அங்கு வயல் வைத்திருந்த யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஒருவரால் திட்டமிட்டுக் கொடுக்கப்பட்டது என்பதைப் பின்னர் அறிந்து கொண்டோம்.

இந்த நிலைமையில் தருமபுரம் இளைஞர்கள் இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதலுக்கும் எமது தோழர்களுக்கும் சம்பந்தமில்லாதபோதும், யாரோ கொடுத்த தவறான தகவல்களால் இராணுவத்தினர் விசுவமடுவிலிருந்த எமது தோழர்கள் மீது குறி வைத்ததால், அவர்களில் சிலர் பாதுகாப்புத்தேடி சுமார் 25 மைல்கள் கால் நடையாக நடந்து கோணாவிலுள்ள எமது முகாமுக்கு பாதுகாப்புத் தேடி வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் சில நாட்கள் எவ்வித தொந்தரவுமின்றித் தங்கியிருந்தனர்.



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களின் பின்னர் இராணுவ உயர் அதிகாரிகளின் தீர்மானத்துக்கமைய விசுவமடுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டுவிட்டது. அதன் பின்னர்தான் பாதுகாப்புத்தேடி யாழ்ப்பாணத்திலுள்ள தமது கிராமங்களுக்குச் சென்ற தோழர்களும், கோணாவிலில் எமது  அரசியல் பயிற்சி முகாமில் தங்கியிருந்த தோழர்களும் படிப்படியாக விசுவமடு திரும்பி தமது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். ஆனாலும் அவர்களில் சிலருக்கு அந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட உடற்காயங்களும், மனக்காயங்களும், பொருட்காயங்களும் என்றுமே மாறாத தழும்புகளாக வாழ்க்கைப் பாதையின் மீது படிந்துவிட்டன.

அதேநேரத்தில் சரியான பாதையிலும் வழி முறைகளிலும் அமையாத இந்தவிதமான தாக்குதல்கள், நாம் எதிர்பார்க்கும் நன்மைகளைவிடப் பாரிய இழப்புகளையே ஏற்படுத்தும் என்பதற்கும் இந்தச் சம்பவம் ஒர் உதாரணமாக அமைந்துவிட்டது. இது பற்றி விசுவமடுவிலும் தருமபுரத்திலும் இருந்த எமது தோழாகள் பின்னர் சுயபரிசீலனை செய்து கொண்டனர்.

நான் இந்தச் சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்த புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு விஸ்தாரமாக விளக்கியதின் நோக்கம், புலிகள் அன்று உச்ச நிலையில் நின்றுகொண்டு செய்யும் மக்களை மதிக்காத அல்லது மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் நீண்டகாலம் நிலைக்காது என்பதைப் பூடகமாக உணர்த்துவதற்காகவே. அதை அன்றைய நிலையில் என்னை விசாரித்த புலிகள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் என்னை விசாரித்த புலிகளில் சிலர் இன்றிருந்தால் நிச்சயம் அந்த உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அப்படிச் சிலர் இலங்கையிலோ புலம்பெயர் நாடுகளிலோ அரச படைகளின் கைகளில் அகப்படாமல் இருக்கக்கூடும் என நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தொடரும்…

முன்னைய பதிவுகள்